2008 ஏப்ரல் 9]

அவர்களால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

77—

சரணாலயம்

***35795—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வனச் சரகம், பெட்டமுகிலாளம் வனப் பகுதியில் யானைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதிக்குட்பட்ட பெட்டமுகிலாளம் வனப் பகுதி, ஏற்கெனவே யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட நீலகிரி மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அமைந்துள்ளது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இங்கு யானைகள் நன்றாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எனவே, பெட்டமுகிலாளம் வனப் பகுதியில் தனியாகச் சரணாலயம் அமைக்கின்ற கருத்துரு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டை பெட்டமுகிலாளம் வனப் பகுதி என்பது கர்நாடக மாநில, மைசூர் வனப் பகுதியை ஒட்டியுள்ளது. குடிநீர் மற்றும் உணவுக்காக மைசூர் வனப் பகுதியிலிருந்தும், நமது வனப் பகுதியிலேயிருந்தும் கூட்டங்கூட்டமாக 60 முதல் 80 யானைகள் வனங்களை விட்டு

[2008 ஏப்ரல் 9

என்னுடைய தொகுதியிலே உள்ள கிராமங்களுக்குள் வருடந்தோறும் வந்து சுமார் ஆயிரம் எக்டேர் நிலப்பரப்பிலேயுள்ள விவசாயிகளுடைய பல கோடி ரூபாய் மதிப்புள்ள நெல், வாழை, கரும்பு, தக்காளி போன்ற பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. கடந்த மூன்று மாதங்களிலே 5 நபர்கள் யானைகள் மிதித்து இறந்துள்ளனர், 8 நபர்களுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அன்றைக்கு தந்தத்திற்காக யானைகள் வீரப்பனால் வேட்டையாடப் பட்டதாகத் தெரிய வந்தது. ஆனால் இன்றைக்கு, எந்த வீரப்பனால் யானைகள் தந்தத்திற்காக வேட்டையாடப்படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது அரசினுடைய நடவடிக்கை என்ன? யானைகள் அதிகமாக உள்ள என்னுடைய தேன்கனிக்கோட்டை வனச் சரகத்திலே யானைகள் சரணாலயம் அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானைகள் காப்பகமாக அறிவிக்கப்பட்டுவிட்ட காரணத்தாலேயே யானைகள் காடுகளிலிருந்து வெளியே வருவதைத் தடுக்க முடியாது. இந்தியாவிலுள்ள 24,000 யானைகளில் தென் மாநிலங்களான கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா போன்ற வனப் பகுதிகளில் மட்டும் 14,000 யானைகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். அதில், தமிழ்நாட்டிலே மட்டும் 4,015 யானைகள் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். யானைகள் பொதுவாகக் கூட்டங்கூட்டமாகத்தான் ஆங்காங்கே நடமாடுகின்றன. நாங்கள் சூரிய மின்வேலி அமைத்து, அவற்றையெல்லாம் தடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைப்போலவே, யானைகள் வழித்தடங்களைக் கண்டறிந்து - Elephant Corridors—அந்த யானைகள் வழித்தடத்தில் இருக்கின்ற சிக்கல்களைப் போக்குவதற்காக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு 2 கோடியே 68 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கித் தந்து, 395 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. எனவே, அந்த யானைகள் வெளியே சிதறிவிடாமல் தடுப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீறி பாதிப்பு ஏற்படுமேயானால், அவற்றுக்கெல்லாம் நஷ்டஈடு தருவதற்கு மாண்புமிகு தலைவர்

2008 ஏப்ரல் 9]

கலைஞர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வேலியையும் மீறி யானைகள் விவசாயிகளுடைய பயிர்களைச் சேதப்படுத்துகின்றன. ஆகவே, மின்வேலிக்கு மாற்றாக, கர்நாடக மாநில எல்லைப் பகுதியிலே அமைத்துள்ளதுபோல கருங்கல் கட்டடம் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வேலி அமைக்கின்ற நேரத்திலே அகழிகளையும் வெட்டுகிறோம். ஏனென்றால், யானைகள் கொஞ்சம் அறிவான மிருகங்களாகத்தான் இருக்கின்றன. அவை, காய்ந்த மரங்களை எடுத்துப்போட்டு அந்த வேலிகளைச் சேதப்படுத்திவிட்டு உள்ளே வருகின்றன. அப்படி வராமல் தடுப்பதற்காக நாங்கள் அகழிகளையும் வெட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, கற்சுவர் அமைத்தால், கிட்டத்தட்ட 5,000 முதல் 10,000 கிலோ மீட்டர் தூரம் வரை அமைக்க வேண்டும். அதற்கு மிகுந்த பொருள் செலவாகும். மத்திய அரசின் தேசிய வன உயிரின ஆணையத்தைத் தொடர்பு கொண்டு அதற்கான நிதி ஒதுக்கித் தருமாறு நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இதுவரை இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006-2007-லே 262½ கிலோ மீட்டர் தூரம் சூரிய மின்வேலி அமைப்பதற்காக 4 கோடியே 24 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்தார்கள். 2007-2008-லே 303.25 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைப்பதற்கு 4 கோடியே 85 இலட்சம் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலே உள்ள வனப் பகுதியிலே சென்ற ஆண்டு 20 கிலோ மீட்டர் தூரத்திற்கு சூரிய மின்வேலி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

[2008 ஏப்ரல் 9

திரு. கரி. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இரண்டு, மூன்று ஆண்டுகளாக வன விலங்குகள் விவசாயப் பயிர்களைத் தொடர்ந்து அழித்து வருகின்றன. அதேபோல, மனிதர்களுடைய உயிர்களையும் அவை பறித்துவிடுகின்றன.

இந்த நிலை தொடர்ந்து இருப்பதற்குக் காரணம், இது நமது தமிழகத்திலும், அண்டை மாநிலத்திலும் இருக்கக்கூடிய வனவிலங்குகளுடைய எண்ணிக்கை அதிகமாகி இருப்பதுதான் என்று சொல்கிறார்கள். இவ்வாறு அதிகமாக இருப்பதால் நமக்கு என்ன பலன் கிடைக்கிறது? இன்றைக்கு மனித உயிர்களுக்கு இழப்பு ஏற்படுகிறது. இச்சூழ்நிலையில், நாம் வனவிலங்குகளை வளர்ப்பதிலேயே ஏன் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனவிலங்குகளைப் பாதுகாக்க வேண்டுமென்று மத்திய-மாநில அரசுகள் சட்டங்களைப் போட்டு 1972-லிருந்து பாதுகாத்து வருகிறார்கள். எனவே, மனித உயிர்களைப் போல அதுவும் ஓர் உயிர். அவற்றைப் பாதுகாக்க வேண்டும். மீறி, அதனாலே பாதிப்பு ஏற்படும் என்றால், விவசாயிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக, அக்கறையுள்ள நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள், அதற்காக நிதி ஒதுக்கித் தந்து, 2006-2007-லே உயிர் இழப்பு ஏற்பட்ட 30 பேர்களுக்கு 30 இலட்ச ரூபாயும், சொத்துகள் சேதம் அடைந்த 33 பேர்களுக்கு 3,12,664/- ரூபாயும், பயிர் நட்டம் அடைந்த 1,267 பேர்களுக்கு 52,42,662/- ரூபாயும், வீடுகள் சேதம் அடைந்த 10 பேர்களுக்கு 35 இலட்ச ரூபாயும், கால்நடை சேதம் அடைந்ததற்காக இரண்டு பேர்களுக்கு 4,000/- ரூபாயுமாக, மொத்தம் 85,94,326/- ரூபாயும் 2007-2008-லே 31-3-2008 வரை 23 பேர்களுக்கு 23 இலட்சம் ரூபாயும், 30 பேர்களுக்கு 3,35,000/- ரூபாயும், 660 பேர்களுக்கு பயிர் நட்டம் அடைந்தவர்களுக்கு 38,87,800/- ரூபாயும், சேதம் அடைந்த பயிர்களுக்காக 12 பேர்களுக்கு 3,35,000/- ரூபாயும், இரண்டு-மூன்று கால்நடைகள் சேதம் அடைந்ததற்காக ரூ. 6,000/-ம் ஆக மொத்தம் 65,83,993/- ரூபாய் கொடுத்து, இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத

2008 ஏப்ரல் 9]

அளவிற்கு முன்னுதாரணமாக, தலைவர் கலைஞர் அவர்கள் 1,51,78,319 ரூபாயை வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 78, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரா. லீமா றோஸ், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

78—

சாலை சீரமைப்பு

*__20702—திருமதி ரா. லீமா றோஸ்:__

மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், அழகிய மண்டபம்-ஆற்றூர் சாலை, சித்திரங்கோடு-வேர்க்கிளம்பி சாலைகளை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையளிக்க அனுமதி கோருகிறேன். கன்னியாகுமரி மாவட்டம் அழகிய மண்டபம்-ஆற்றூர் சாலையானது, குளச்சல் முதல் திருவட்டாறு வரை செல்லக்கூடிய மாநில நெடுஞ்சாலைகள் அமைந்துள்ள பகுதியாகும். இந்தச் சாலை கடந்த நிதியாண்டில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்மூலம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிற அழகிய மண்டபம் முதல் ஆற்றூர் வரையிலான பகுதியை இருவழிச் சாலையாக மாற்றுவதற்குத் தேர்வு செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கடந்த மாதம் இறுதி செய்யப்பட்டிருக்கிறது. விரைவில் அந்தப் பணி தொடங்கும். மேலும், இன்னொரு கேள்வியானது, சித்திரங்கோடு முதல். வேர்க்கிளம்பி வரையிலான சாலை, இடைவெளித் தடமாக மாற்றுவது குறித்து கேட்டிருக்கிறார். அந்தச் சாலை மாவட்ட இதர சாலையாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல், நொடிகள் சரிசெய்யப்பட்டு அதுவும் ஏற்றவகையில் உள்ளது. எனவே, இந்த அளவில் இந்தச் சாலை நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.